# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in


**No.TNTEU/R/Elig./2019/348** **Date: 18.10.2019**

**Prof.V.Balakrishnan,**
**Registrar i/c**

பெறுநர்

முதல்வர்கள்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன்
இணைவுபெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: 2019-2020-ம் கல்வியாண்டு பி.எட்/எம்.எட்/பி.எஸ்சி.பி.எட் மாணவர் சேர்க்கை அசல் சான்றிதழ் சரிபார்ப்பு-சமர்ப்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ள ஆவணங்கள் - சமர்ப்பிப்பது–தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலககடிதம் எண்.TNTEU/B.Ed&M.Ed. Admission/ 2019-20/ 344,நாள் 03.10.2019

-----

பார்வையில் காணும் கடிதத்தில் 2019-2020-ம் கல்வியாண்டு பி.எட்/எம்.எட்/பி.எஸ்சி.பி.எட் மாணவர் சேர்க்கைக்கான அசல் சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் தேதிகள் அனைத்து கல்வியியல் கல்லூரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு சான்றிதழ்கள் சரிபார்ப்பு 18.10.2019-ம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

அசல் சான்றிதழ் சரிபார்ப்பிற்காக குறிப்பிடப்பட்ட தேதிகளில் நேரடியாக வர இயலாத கல்வியியல் கல்லூரிகள் **22.10.2019** அன்று நேரில் வந்து 2019-2020-ம் கல்வியாண்டு பி.எட்/எம்.எட்/பி.எஸ்சி.பி.எட் மாணவர் சேர்க்கைக்கான அசல் சான்றிதழ்களை சரிபார்க்கும்படி மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது. 22.10.2019 அன்று அசல் சான்றிதழ்களை சரிபார்க்கவில்லை என்றால் அக்கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கை அங்கீகார அனுமதி வழங்கப்படாது என கண்டிப்பாக தெரிவிக்கப்படுகிறது

மேலும்,அசல் சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ள மாணவர்களின் குறைபாடுகளுடைய சான்றிதழ்களை(Deficiency Certificates) கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக வந்து குறைகளை களைவதற்கான சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

| தேதி | கல்லூரிகள் இயங்கும் மாவட்டங்கள் |
|---|---|
| 04.11.2019 | கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், சென்னை, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், திருவள்ளூர் |
| 07.11.2019 | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், நாமக்கல், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், வேலூர் |

2019-2020-ம் கல்வியாண்டு பி.எட்/எம்.எட்/பி.எஸ்சி.பி.எட் மாணவர் சேர்க்கைக்கான அசல் சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ள மாணவர்களின் குறைபாடுகளுடைய சான்றிதழ்களை மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இப்பல்கலைக்கழத்திற்கு நேரடியாக வந்து குறைகளை களைவதற்கான சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

VBalakrishnan
18.10.19
பதிவாளர் (பொ)